# சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வும்

குறிப்புச்சட்டகம்

- முன்னுரை
- சுற்றுசூழல் அறிமுகம்
- சூழல் மாசடைதல்
- சூழலைப் பாதுகாப்போம்
- சூழல் பாதுகாப்பு நடைமுறைகள
- முடிவுரை

## முன்னுரை

இயந்திரமயமான இந்த உலகில் தொழிற்சாலைகள், கைத்தொழில் பேட்டைகள் அதிகரிப்பாலும் சுற்றுசூழலானது பல்வேறு வகையான பாதிப்புகளுக்கு உள்ளா கின்றது. சுற்றுச்சூழலில் உள்ள இயற்கை வளங்களானவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன்

எனவே அரிதான அவ்வளங்களை மிகவும் கவனமாகப் பயன்படுத்தி நம் எதிர்க்கால சந்ததியினருக்குக் கையளிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

## சுற்றுசூழல் அறிமுகம்

சுற்றுசூழல் எனப்படுவது எம்மைச் சுற்றியுள்ள இயறங்கை பரப்பாகும். இவ் இயற்கையானது காடுகள், கடல்கள் மற்றும் பல்வேறு நிலப்பரப்புகளையும் கொண்டமைந்துள்ளது. மேலும் புதுப்பிக்க முடியா வளங்களாகிய கனிமங்கள் எரிப்பொருட்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

அந்தந்த இயற்கை சூழலில் பல்வேறுபட்ட உயிரினங்கள் மனிதர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான நுண்ணுயிர்களும் இயற்கையைப் பேணிப் பாதுகாக்க முடியும். நாம் வாழும் சூழலானது ஆரோக்கியமாக இருந்தால் மாத்திரமே நீண்ட காலம் நீடித்து வாழ முடியும்.

## சூழல் மாசடைதல்

இயற்கையின் அரும்பெரும் கொடைகளை உள்ளடக்கிய சூழலானது பல்வேறுபட்ட காரணிகளால் மாசடைதலிற்கு உட்படுகின்றது. பல்வேறு மனித நடவடிக்கைகளே பெரும்பாலும் மாசடைதல் ஏற்படுத்துகின்றன.

சூழல் மாசடைதலை நீர் மாசடைதல், நலம் மாசடைதல், வளி மாசடைதல் என வகைப்படுத்தலாம். நீரானது தாவரங்களுக்கும், மற்றும்

உயிரினங்களுக்கும் மிக இன்றியமையாதது. பூமியின் எழுபத்தைந்து பரப்பு நீரினால் சூழப்பப்பட்டுள்ளது. இந்த நீரானது தொழிற்சாலை கழிவுகளை நீர்நிலைகளில் கொட்டுவதாலும், கிருமி நாசினிகளை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் போது அவை நீரில் கலப்பதாலும் மாசடைகின்றது. நிலமானது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் குப்பைகளை நிலத்ததில் புதைப்பதாலும், சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடுவதாலும் மாசடைதலிற்கு உட்படுகிறது.

மேலும் அனைத்து உயிர்களின் சுவாசத்திற்கு இன்றியமையதாக விளங்கும் வளியானது வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுப் புகையியாலே அதிக அளவில் மாசுபடுகின்றது.

இவ்வாறு சுற்றுச்சூழலில் காணப்படும் இயற்கை வளங்களானவை மனித செயற்பாடுகளினால் அழிவிற்கு உள்ளாகின்றன.

### சூழலைப் பாதுகாப்போம்

**“வசதிக்குத் தேவை இருக்கை**
**வாழ்விற்குத் தேவை இயற்கை”**

அதிகரித்து வரும் மாசடைதலானது தாவர மற்றும் விலங்கு உயிர்ப் பல்வகைமையையும், ஏனைய உயர்களின் நீடித்த தன்மையையும் மனித இனத்தின் வாழ்தகைமையையும் கேள்வி குறியாக மாற்றியுள்ளது. இந்நிலையை மாற்றியமைக்க வேண்டுமாயின் சூழலானது அதன் உயிர்த்தன்மை மாற்றமடையாதாவாறு பாதுகாக்கப்படல் வேண்டும்.

சூழல் பாதுகாப்பு எனப்படுவது நிலம், நீர், காற்று உட்பட அனைத்து இயற்கை வளங்களையும் மேற்கொள்வதையும் அருகிவருகின்றன புதுப்பிக்கக்கூடிய வளங்களை மீள உருவாக்குவதையுமே குறிப்பிடுகின்றது. தற்போதைய அவசர உலகில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தலின் அதிகரித்துள்ளது. இவை சூழலிலற்கு மட்டுமின்றி மனிதர்களிற்கும் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே இவற்றைத் தவிர்த்து கடதாசி மற்றம் துணிப்பைகளையும், கண்ணாடி, மட்பாண்ட பொருட்களையும் பயன்படுத்த வேண்டும். அத்துடன் வேளாண்மை நடவடிக்கைகளின் போது இரசாயண கிருமிஜ நாசனிகள், செயற்கை பசளைகள் போன்றவற்றைத் தவிர்த்து இயற்கை உரங்களையும், பூச்சி நாசினிகளையும் பயன்படுத்த வேண்டும். இதனால் நாம் உண்ணும் உணவுப்பொருட்கள் இரசாயணங்கள் ஏதுமற்று நமக்கு ஆரோக்கியமான வாழ்க்கையைப் பெற்றுத் தரும்.

## சூழல் பாதுகாப்பு நடைமுறைகள்

மனித நடவடிக்கைகளால் சூழலிற்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்காக சர்வதேச ரீதியிலும் நாடுகள் தனிப்பட்ட நீதியிலும் பல்வேறு சட்ட திட்டங்களை இயற்றியுள்ளன. அத்துடன் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறித்து பல்வேறு மாநாடுகள் நடத்தப்பட்டு, நாடுகளிற்கிடையில் ஒப்பந்தங்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கியோட்டா உடன்படிக்கை, வியன்னா மாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட ஓசோன் பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கை போன்றன முக்கியமானவையாகும்.

அமெரிக்கா மற்றும் நோர்வே போன்ற நாடுகள் சூழலிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் குளோரோ புளோரோ கார்பன், மெத்தேன் போன்றவற்றின் பயன்பாட்டில் கடுமையான சட்டத்திட்டங்களை ஏற்படுத்தியுள்ளன.

மேலும் மக்களிடையே விழப்புணர்வுகளை ஏற்படுத்தும் நோக்கில் சர்வதேச அமைப்புக்கள் ஒன்றிணைத்து ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 16இல் உலக ஓசோன் தினத்தையும் மற்றும் மார்ச் 222 ல் உலக நீர் தினத்தையும் அனுசரித்து வருகின்றன.

## முடிவுரை

**“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”** என்பது பழமொழி எனவே நம் உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொண்டு நம் உடலை, வீட்டை, தெருவை மற்றும் சுற்றுப்புற சூழலைத் தூய்மையாகப் பாதுகாப்போம். நம் உயிரும் உள்ளமும் நலமுடன் இருக்கப் பாடுபடுவோம். சிறு வயது முதலே சிறுவர்களிற்கு சூழல் பாதுகாப்பின் அவசியத்தைக் கற்றுத் தருவதோடு மக்களிடையே சூழல் மாசடைதல் தொடர்பான விழப்புணர்வையும் ஏற்படுத்தவேண்டும்.

சூழலைப் பாதிக்காத வகையில் எமது செயற்பாடுகளை மேற்கொண்டு இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாத்து எதிர்க்கால சந்ததியினருக்கு கையளிப்போம்.

மா.சங்கீதா

தமிழ்துறை முதலாமாண்டு